# மானிடவியல் நோக்கில் நற்றிணைத் திணைக்குடிச் சமூகம்
# The Ethnic Society of Nattrinai in Anthropological Aspect

**திரு. ப.அ.முஹம்மது ஆதில் முர்ஷித் [1], முனைவர். க.சிராஜுதீன் [2]**

[1] முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர், முதுகலைத் தமிழாய்வுத்துறை,
ஜமால் முகமது கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி.

[2] ஆய்வு நெறியாளர் & உதவிப்பேராசிரியர், முதுகலைத் தமிழாய்வுத்துறை,
ஜமால் முகமது கல்லூரி (பாரதிதாசன் பல்கலைக்கழக இணைவு பெற்றது), திருச்சிராப்பள்ளி.

**ABSTARCT**

From birth to death, each and every living being in the world depends on another living being. Among the living beings, Human race having the ability to think as a sixth sense, tended to live in groups paved the way to emerge Society. When every human being in the society discharge his duties & responsibilities effectively, the society develops and advances to the next level. Thus, it can be known through Ancient Tamil literature that the social structure & life of the Tamil people during the ancient period were based on nature. The ancient Tamil people lived a prosperous life by dividing the land into four categories according to nature. In this way, the purpose of this article is to explore the society who lives in ancient Tamil Nadu with the help of Nattrinai texts.

**முன்னுரை**

உலகிலுள்ள ஒவ்வொரு உயிரினமும் பிறப்பு முதல் இறப்பு வரை மற்றொரு உயிரை சார்ந்து வாழ்கின்றன. சிந்திக்கும் ஆற்றலை ஆறாவது அறிவாகப் பெற்ற மனித இனம் குழுக்களாக வாழ்வதற்கு முனைந்தபோது சமூகம் எனும் அமைப்பு தோன்றியது. சமூகத்தில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு மனிதனும் தனது பங்களிப்பினைச் சரியாகச் செய்யும்போது சமூகம் வளர்ச்சி அடைந்து அடுத்த நிலைக்கு முன்னேறுகிறது. அவ்வாறு சங்க காலத் தமிழ் மக்களின் சமூக அமைப்பும், அச்சமூக மக்களின் வாழ்க்கையும் இயற்கையை ஒட்டியே அமைந்திருந்ததைச் சங்க இலக்கியங்கள் வழியாக அறிய முடிகின்றது. இயற்கையின் தன்மைக்கேற்ப நிலத்தினை ஐந்து வகையாகப் பகுத்துப் பண்டைத் தமிழ் மக்கள் வளமான வாழ்வு வாழ்ந்துள்ளனர். அவ்வகையில் பழந்தமிழகத்தில் வாழ்ந்த திணைக்குடிச் சமுதாயத்தை நற்றிணை பாடல்களின்வழி விளக்கமாக ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**சமூகம்**

பழந்தமிழகம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என இயற்கையின் அடிப்படையில் நானிலமாக பிரித்து வாழ்க்கை நடத்தினர். இங்கு வாழ்ந்த மக்கள் நிலத்தின் தன்மைக்கேற்ப வாழ்க்கை நெறிகளை வகுத்துக் கொண்டு சமூகமாக வாழத் தொடங்கினர். இவர்களே காலப்போக்கில் திணைக் குடிகளாக அறியப்பட்டனர்.

> **"குடிகள் (குலம்) பல தமிழகத்தில் தோன்றின. அவ்வாறு தோன்றிய குடிகளுள் குறவர்குடி, வேட்டுவர்குடி, ஆயர்குடி, கானவர்குடி, உழவர்குடி, பரதவர்குடி, நுளையர்குடி, எயினர்குடி, மறவர்குடி முதலியன குறிப்பிடத்தக்கன" (தமிழ் நில வரலாறு, ப.119)** என்பார்

கோ.தங்கவேலு.

மேலும், இம்மக்கள் நிலத்தின தன்மைக்கேற்ப பல்வேறு பழக்கவழக்கங்களைக் கடைப்பிடித்தனர். பழக்கம் என்பது மரபு வழியாகவும், வழக்கம் என்பது ஒரு செயலைத் தொடர்ந்து செய்வதாலும் ஏற்படுகின்றன. பழக்கம், வழக்கம் குறித்து வே.அண்ணாமலை அவர்கள்,

> **"பழக்கம் என்பது நாம் பழகிக் கொள்வதாகும். வழக்கம் என்பது நம் முன்னோர் பழகிய பழக்கம் நமக்கு வழக்கமாக வருவதாகும். எனவே முன்னோர்கள் பழக்கமே வழக்கமாகும். நம் பழக்கம் பின்னோருக்கு வழக்கமாகும்" (சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம், ப.2)**

என்கிறார். எனவே, காலத்தின் ஓட்டத்திற்கு ஏற்ப பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்தாலும் பண்டைய தமிழ் மக்களின் அடையாளங்களை வெளிப்படுத்தும் கருவிகளாகப் பழக்கவழக்கங்கள் விளங்குகின்றன. நற்றிணைப் பாடல்களை ஆராய்கையில் தொழில், சமூகம், பெண்கள் சார்ந்த பழக்கவழக்கங்கள் இடம்பெற்றிருப்பதைக் காணமுடிகின்றது.

**குறிஞ்சித் திணை சமூகம்**

மலை சார்ந்த பகுதிகளைக் கொண்ட நிலப்பகுதி **'குறிஞ்சி'** என வழங்கப்பட்டது. குறிஞ்சி நிலத்தில் வாழ்ந்த ஆடவர்கள் **"மலைநாடன்" (நற்றிணை, பா.168:6), "குன்றநாடன்" (நற்றிணை, பா.273:9), "கானவர்" (நற்றிணை, பா.82:11), "குறவர்" (நற்றிணை, பா.5:3)** என நற்றிணையில் குறிப்பிடப்பட்டுள்ளனர். அந்நிலத்தில் வாழ்ந்த பெண்கள் **"கொடிச்சி" (நற்றிணை, பா.276:4)** எனக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. மேலும், மலைப் பகுதியில் வேட்டையாடுதலைத் தொழிலாகக் கொண்ட ஆண்மகனை **"மழவர்" (நற்றிணை, பா.52:9)** என்ற பெயராலும், கையில் வேலேந்திப் போருக்குச் செல்பவனை **"வெற்பன்" (நற்றிணை, பா.104:7)** என்ற பெயராலும் வழங்கப்பட்டுள்ளனர்.

இம்மக்களால் உருவாக்கப்பட்ட மூதூர்களும், நல்லூர்களும், பேரூர்களும் **'ஊர்'** எனும் பொதுப்பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளன. **"குறிஞ்சி நல்லூர்" (நற்றிணை, பா.116:11), "கொழுமிளைச் சீறூர்" (நற்றிணை, பா.95:7), "ஊறலஞ் சேரிச் சீறூர்" (நற்றிணை, பா.77:8)** ஆகியவற்றால் மலைப் பகுதியில் சிறிய ஊர்கள் அமைந்திருந்தது தெளிவாகின்றது. மலை வாழ் மக்களான கானவர், குறவர் ஆகியோர் வீடுகள் அமைத்து சமூகமாக வாழ்ந்த பகுதி **'சிறுகுடி'** எனப்பட்டது.

**"கல்கெழு சிறுகுடி" (நற்றிணை, பா.386:9)**
**"கல்லக வரைப்பின் கான்கெழு சிறுகுடி" (நற்றிணை, பா.122:3)**
**"மறுகுதொறும் புலாவும் சிறுகுடி" (நற்றிணை, பா.114:3)**
**"பெருங்கல்வேலிச் சிறுகுடி" (நற்றிணை, பா.213:6)**
**"கானவர் பெயர்க்கும் சிறுகுடி" (நற்றிணை, பா.82:11),**
**"காந்தளஞ் சிறுகுடி" (நற்றிணை, பா.85:10)**

முதலான குறிஞ்சித் திணைப் பாடல்களால் மலை வாழ் மக்கள் சிறுகுடிகள் அமைத்து வாழ்ந்துள்ளது உறுதியாகின்றது.

**"நெடுங்கண் ஆரத்து அலங்குசினை வலந்த**
**பசுங்கேழ் இலைய நறுங்கொடித் தமாவம்**
**தீம்தேன் கொள்பவர்" (நற்றிணை, பா.292:1-3)**

என்ற நல்வேட்டனாரின் பாடலால் குறிஞ்சி நில மக்கள் தேன் எடுக்கும் தொழிலை மேற்கொண்டவர்களாக விளங்கினர் என்பதை உறுதிப்படுத்துகின்றது.

**முல்லைத் திணை சமூகம்**

மரங்கள் அடர்ந்த காடுகளைக் கொண்ட நிலப்பகுதி **'முல்லை'** என வழங்கப்பட்டது. இந்நிலத்தில் கால்நடைகளை மேய்க்கும் தொழிலை மேற்கொண்டு வாழ்ந்த ஆண்கள் **"கோவலர்" (நற்றிணை, பா.69:8), "இடையன்" (நற்றிணை, பா.169:7)** ஆகிய பெயர்களைக் கொண்டு அழைக்கப்பட்டனர். இந்நிலத்தைச் சேர்ந்த மகளிர் **"கோதை மகளிர்" (நற்றிணை, பா.238:2)** என நற்றிணையில் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது.

**"இடையர்கள் கால்நடை மேய்ப்பதைத் தலையாய தொழிலாகக் கொண்டிருந்தாலும் தினை விதைத்தலிலும் ஈடுபட்டனர். பால், தயிர், வெண்ணெய் ஆகிய பொருள்களைப் பிற நிலம் சென்று விற்றுத் தங்கள் பொருளாதாரத்தை வளப்படுத்திக் கொண்டனர்" (சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள், ப.24)** என்கிறார் ஆ.தட்சிணாமூர்த்தி.

காடுகளில் வேட்டைத் தொழிலை மேற்கொண்ட ஆடவர்களை **"வேடுவர்" (நற்றிணை, பா.312:4)** என நற்றிணைப் புலவர் குறிப்பிட்டுள்ளார். முல்லை நிலத்தில் வாழ்ந்த வேட்டுவன் உடும்பைக் கொன்றும், வரியுடைய தவளையைத் தோண்டி எடுத்தும், புற்றுகளில் வாழும் ஈசல்களைத் தோண்டி எடுத்தும், பகலில் முயல்களை வேட்டையாடியும் உணவு உட்கொண்ட செய்தியை,

**"உடும்பு கொலீஇ வரிநுணல் அகழ்ந்து**
**நெடுங்கோட்டுப் புற்றத்து ஈயல் கெண்டி**
**எல்லுமுயல் எறிந்த வேட்டுவன்" (நற்றிணை, பா.59:1-3)**

எனக் கபிலர் நற்றிணைப் பாடலில் பதிவுசெய்தியுள்ளார்.

அக்காட்டுப் பகுதி கரடுமுரடாக விளங்கியமையால் **“வன்புலம்” (நற்றிணை, பா.59:6)** என நற்றிணைப் புலவர் குறிப்பிடுகிறார். முல்லை நிலத்தில் வாழ்ந்த மக்கள் காடுகளை சீர்செய்து வாழ்வதற்குரிய இடக்கூறுகளை உருவாக்கினர். அவர்கள் காடுகளில் இருந்த குருத்த மரங்களையும் முல்லைக் கொடிகளையும் கொண்டு கூரை வேய்ந்து வீடுகள் அமைத்தனர். அவ்வாறு பல வீடுகளைப் பெற்று விளங்கியதை **“ஆங்கசைச் சீறூர்” (நற்றிணை, பா.266:4)** என்றும், மக்கள் ஓசையோடு விளங்கிய சீறூர்களைப் **“பேரிசைச் சீறூர்” (நற்றிணை, பா.367:6)** என்றும் நற்றிணைப் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

**“கருங்கண் கருனைச் செந்நெல் வெண்சோறு**
**சூருடைப் பலியொடு கவரிய குறுங்கால்**
**கூழுடை நல்மனை” (நற்றிணை, பா.367:3-5)**

எனும் பாடல் வழியாக முல்லை நில மகளிர்கள் தங்களது வீடுகளில் சமைத்த உணவினை முதலில் தெய்வத்திற்குப் படைத்து வைக்கும் வழக்கமுடையவர்களாக இருந்ததை அறியமுடிகின்றது.

**மருதத் திணை சமூகம்**

வயல் சார்ந்த பகுதிகளைக் கொண்ட நிலப்பகுதி **‘மருதம்’** என வழங்கப்பட்டது. **“இங்கு வாழ்ந்த மக்கள் உழவர், களமர், கடையர் எனப்பட்டனர். பெண்கள் உழத்தியர், கடைசியர் எனப்பட்டனர். இந்நிலத்துத் தலைவன் மகிழ்நன், ஊரன் என்றும், தலைவி மனைவி என்றும் அழைக்கப்பெற்றனர்” (தமிழ் நில வரலாறு, ப.120)** என்பார் தங்கவேலு. அவரது கூற்றை மெய்ப்பிக்கும் வகையில் உழவுத் தொழில் செய்து வாழ்ந்த ஆண்மகன் **“உழவன்” (நற்றிணை, பா.97:9)** என நற்றிணைப் பாடலில் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது. கதிரவன் உதயமாகி மறையும் வரை வயல்களில் உழவுத் தொழில் மேற்கொள்ளப்பட்டமையால், அத்தொழிலை **“நாட்தொழில்” (நற்றிணை, பா.330:4)** என ஆலங்குடி மருதனார் நற்றிணையில் குறிப்பிட்டுள்ளார்.

**“மலைக்கண் டன்ன நிலைபுணர் நிவப்பின்**
**பெருநெல் பல்கூட்டு எருமை உழவர்” (நற்றிணை, பா.60:1-2)**

என்பதைக் கொண்டு மலையினை ஒத்த நெற்கூடுகளையும் எருமை மாடுகளையும் கொண்டவர்களாக மருத நில உழவர்கள் விளங்கியதை அறிய முடிகின்றது. சங்க இலக்கிய ஆய்வாளரான மாரியப்பன், **“உழவர் என்பார் நிலஉடைமையாளர், நிலத்தில் உழுது வேலை செய்பவர்கள் அன்றாடம் பிழைப்பு நாடும் கூலிகள்” (தமிழக வரலாறு - ஒரு சமூகப் பொருளாதாரக் கண்ணோட்டம், ப.68)** என்கிறார்.

வயல்கள் நிறைந்த நிலப் பகுதிகளுக்குத் தலைவனாகவும், வறியவர்களுக்கு வாரி வழங்கும் வள்ளண்மை கொண்டவனாகவும் மருத நில ஆண்மகன் விளங்கியதைக் **“கயற்கணம் கலித்த பொய்கை ஊரன்” (நற்றிணை, பா.230:5)** என்பதால் அறியமுடிகின்றது. செல்வங்களைப் பெற்று மகிழ்ச்சியான வாழ்வு வாழ்ந்தமையால், அந்நிலத்து ஆண்மகன் **“மகிழ்நன்” (நற்றிணை, பா.340:1)** என்ற பெயரைப் பெற்று விளங்கினர்.

ஆற்றங்கரைக்கு அருகில் அமைந்திருந்த மருத நிலமானது ஏனைய நிலங்களைக் காட்டிலும் நாகரிகத்திலும் வளத்திலும் சிறந்து விளங்கியது. இதனை வெளிப்படுத்தும் வகையில் மருதத் திணைப் பாடல்களில் மன்றம், அம்பலம், ஊர், குடி முதலான பெயரமைப்புகள் காணக்கிடைக்கின்றன. மருத நில ஊர்கள் மக்கள் ஆரவாரத்துடன் விளங்கியதைக் **“கல்லென்றால் ஊரே” (நற்றிணை, பா.320:7)** என்பதால் அறியமுடிகின்றது. மேலும், அவ்வூர்களில் வாழும் மக்கள் விழா கொண்டாடியமையால் **“விழவின் அழுங்கல் மூதூர்” (நற்றிணை, பா.90:1)** எனப்பட்டது.

உணவுப் பொருட்கள் விளையும் வயல்களைக் கொண்டிருந்த மருத நில ஊர்களில் பெரும்பான்மையான மக்கள் வீடுகள் அமைத்து வாழத் தொடங்கினர். இதனால் வீடுகள் அமைப்பதற்கென திட்டமிடப்பட்டு மருத நிலப் பகுதிகளில் நீண்ட தெருக்கள் ஏற்படுத்தப்பட்டன. இதனை **“ஆறு கிடந்தன்ன அகல்நெடுந் தெரு” (நற்றிணை, பா.200:3)** என்னும் நற்றிணைப் புலவரின் கூற்று உறுதிப்படுத்துகின்றது.

**“தடமருப்பு எருமை மடநடைக் குழவி**
**தூந்தொறும் யாத்த” (நற்றிணை, பா.120:1-2)**

என்பதால் மருத நில மக்களின் வீட்டுத் தூண்களில் எருமை மாடுகள் கட்டப்பட்டிருந்ததை அறிய முடிகின்றது. மேலும், சங்க காலத்தில் குழந்தை ஈன்ற மகளிரைச் சுற்றிலும் வெண்கடுகு தூவும் வழக்கம் அக்காலத் தமிழ் மக்களிடம் இருந்தது. இதனை, **"நெய்யணி மயக்கம்" (தொல், கற்பியல், நூ.5)** என்பார் தொல்காப்பியர்.

**"ஐயவி அணிந்த நெய்யிட்டு ஈரணி" (நற்றிணை, பா.40:7)**

**"நெய்யொடு இமைக்கும் ஐயவித் திரள்காழ்" (நற்றிணை, பா.370:3)**

ஆகிய பாடல்கள் வழியாக மருத நிலத்தில் வாழ்ந்த மகளிர் வெண்கடுகுடன் எண்ணெய் சேர்த்து தலையில் நீராட்டப்பட்டதை அறியமுடிகின்றது.

**நெய்தல் திணை சமூகம்**

கடல்கரையை ஒட்டி அமைந்திருந்த நிலப்பகுதி **'நெய்தல்'** என வழங்கப்பட்டது. இங்கு வாழ்ந்த ஆண்கள் **"துறைவன்" (நற்றிணை, பா.163:12), "சேர்ப்பன்" (நற்றிணை, பா.15:3), "கொண்கன்" (நற்றிணை, பா.111:10)** என அழைக்கப்பட்டனர்.. மேலும், மீன் பிடித்தல், உப்பு விளைவித்தல் ஆகிய தொழில்களை மேற்கொண்ட ஆண்கள் **"பரதவர்" (நற்றிணை, பா.63:1)** என்றும், அவர்களது பெண்கள் **"மீன்எறிப் பரதவர் மகள்" (நற்றிணை, பா.45:3)** என்றும் குறிப்பிடப்பட்டுள்ளனர். பரதவ மக்களால் விளைவிக்கப்பட்ட உப்பினைப் பல்வேறு பகுதிகளுக்குக் கொண்டு சென்று வணிகம் செய்த மக்கள் **"உமணர்கள்" (நற்றிணை, பா.331:2)** எனப்பட்டனர்.

கடற்கரை பெருமணலைக் கொண்டு விளங்கியமையால் **"எக்கர்" (நற்றிணை, பா.15:1)** என்றும், நீர்வளமின்றிச் சுரமாக மாறும் எக்கரிடங்கள் **"கழிச்சுரம்" (நற்றிணை, பா.63:9), "திரைச்சுரம்" (நற்றிணை, பா.111:6)** என்றும் வழங்கப்பட்டன. மேலும், பிற நாடுகளில் இருந்துவந்து ஏற்றுமதி-இறக்குமதி செய்யும் கலங்கள் நிறுத்தப்படும் **'துறை', 'பட்டினம்'** முதலான பகுதிகள் நெய்தல் நிலத்தில் அமைக்கப்பட்டிருந்தன. இதனை உறுதிப்படுத்துவதாக **"நாவாய் தோன்றும் பெருந்துறை" (நற்றிணை, பா.295:1-2), "மருகூர்ப் பட்டினம்" (நற்றிணை, பா.258:10)** போன்ற நற்றிணை நெய்தல் திணைப் பாடல்களிலுள்ள குறிப்புகள் விளங்குகின்றன.

மேலும், செல்வந்தர்கள் மற்றும் வணிகர்களின் மாடமாளிகைகளைக் கொண்ட பகுதியாகவும் **'பட்டினம்'** விளங்கியது. கடலில் சென்று மீன் பிடிக்கும் தொழிலைச் செய்த பரதவ மக்களின் குடியிருப்பினைக் கொண்ட பகுதி **"பாக்கம்" (நற்றிணை, பா.111:9)** என்றும், அக்குடியின் பண்பினை **"ஈகைச் சிறுகுடி" (நற்றிணை, பா.91:9)** என்றும் நற்றிணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு நிலத்திலும் சிறு குழுக்களாகக் கூடி மக்கள் வாழ்ந்த பகுதி **'சிறுகுடி'** என வழங்கப்பட்டது. அவ்வகையில் மீன் வளம் நிறைந்த பகுதி **"பெருமீன் கொள்ளும் சிறுகுடி" (நற்றிணை, பா.219:6)** என்றும், **"புலவு மணல் முன்றில் காமர் சிறுகுடி" (நற்றிணை, பா.239:4-5)** என்றும் நற்றிணையில் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது.

நெய்தல் நில மக்கள் வாழ்வதற்காக அமைத்த குடிசைகள் **'குடம்பை'** எனப்பட்டன. இதனை **"தடந்தாள் தாழைக் குடம்பை" (நற்றிணை, பா.270:1)** என்பதால் அறியலாகிறது. மேலும், அம்மக்கள் குடிசைகள் அமைத்து சேர்ந்து வாழ்ந்த பகுதி **'சேரி'** எனப்பட்டது. இதனைச் **"சேரி சேரா வருவோர்" (நற்றிணை, பா.342:4), "தமர்தமர் அறியாச் சேரி" (நற்றிணை, பா.331:11)** ஆகிய நற்றிணைப் பாடலடிகள் உறுதிசெய்கின்றன.

**"நிணச்சுறா அறுத்த உணக்கல் வேண்டி**
**இனப்புள் ஒப்பும் எமக்குநலன் எவனோ**
**புலவு நாறுதும் செலநின் றீமோ**
**பொருநீர் விளையுள்எம் சிறுநல் வாழ்க்கை" (நற்றிணை, பா.45:6-9)**

என்பதால் ஆண்களால் பிடித்து வரப்பட்ட சுறா மீன்களைப் பறவைகளிடம் இருந்துப் பாதுகாத்துக் காய வைக்கும் தொழிலைப் புலால் நாற்றமுடைய பரதவ மகளிர் மேற்கொண்டுள்ளதை அறியமுடிகின்றது.

**"கயிறுகடை யாத்த கடுநடை எறிஉளித்**
**திண்திமில் பரதவர் ஒண்சுடர்க் கொளீஇ**
**நடுநாள் வேட்டம் போகி வைகறைக்**
**கடல்மீன் தந்து" (நற்றிணை, பா.388:3-6)**

என்ற பாடலில் இரவு நேரத்தில் வெளிச்சத்திற்காக விளக்கோடும், வேட்டைக்காக ஈட்டியையும் படகில் செல்லும் பரதவ ஆண்கள் மீன்களைப் பிடித்துக் கொண்டு அதிகாலையில் கரை சேர்வதாகக் கூறப்பட்டுள்ளது.

**"இலங்குவளை மகளிர் வியல்நகர் அயர**
**மீன்நிணம் தொகுத்த ஊன்நெய் ஒண்சுடர்**
**நீல்நிறப் பரப்பில் தயங்குநிரை உதைப்ப" (நற்றிணை, பா.215:4-6)**

என்பதன் வழியாக மீனில் கொழுப்பினை உருக்கி எடுக்கப்பட்ட நெய்யில் விளக்கேற்றும் வழக்கம் நெய்தல் நிலத்தில் வாழும் மகளிரிடம் இருந்ததைக் காணமுடிகின்றது.

**பாலைத் திணை சமூகம்**

மணல் பகுதிகளைக் கொண்ட நிலப்பரப்பு **'பாலை'** எனப்பட்டது. இந்நிலத்தில் வாழ்ந்த மக்கள் **"வடுகர்" (நற்றிணை, பா.212:5), "மறவர்" (நற்றிணை, பா.33:6), "மழவர்" (நற்றிணை, பா.387:4), "கள்வர்" (நற்றிணை, பா.28:4)** என அழைக்கப்பட்டனர். மேலும், இம்மக்கள் பாலை நிலத்தில் பயணம் செய்பவர்களிடம் இருந்துப் பொருட்களைக் கவர்ந்து வாழ்வதால் **"ஆறலைக் கள்வர்" (பொருநர், அடி.21)** எனப்பட்டனர். ஏரினை நம்பி வாழ்க்கை நடத்தும் மருத நில உழவர்களைப் போன்று வில்லினை நம்பி வாழ்க்கை நடத்தும் பாலை நில மக்களை **"வில்லேர் உழவர்" (நற்றிணை, பா.3:5)** என நற்றிணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நீரின்றி வறண்ட வளமற்ற பகுதிகளையும், கானல் நீர்ப் பகுதிகளையும் உள்ளடக்கிய நிலமாகும். கற்குகைகள் நிறைந்த பாலை நிலப் பகுதியினைப் **"பிணவு" (நற்றிணை, பா.103:8)** என்றும், நீர் வளமற்ற நீண்ட மணல் பகுதியினைச் **"அருஞ்சுரம்" (நற்றிணை, பா.43:5)** என்றும் நற்றிணைப் புலவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இவ்வாறான பகுதிகளில் மக்கள் பயணிப்பதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்ட வழித்தடங்கள் **"சிறுநெறி" (நற்றிணை, பா.333:2)** என்றும், **"நெடுநெறி" (நற்றிணை, பா.224:9)** என்றும் வழங்கப்பட்டன.

**"வம்ப மாக்கள் வருதிறம் நோக்கிச்**
**செங்கணை தொடுத்த செயிர்நோக்கு ஆடவர்**
**மடிவாய்த் தண்ணுமைத் தழங்குகுரல்" (நற்றிணை, பா.298:1-3)**

என்ற நற்றிணைப் பாடல் வழியாகப் பாலை நில மக்கள் தண்ணுமை எனும் இசைக் கருவியை முழங்கிய பின்பே கொள்ளைத் தொழிலில் ஈடுபடுவர்களாக விளங்கியதை அறிய முடிகின்றது.

**முடிவுரை**

பழந்தமிழகத்தில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய நிலப் பகுதிகளில் வாழ்ந்த குடிமக்களின் பெயர்களையும், அம்மக்கள் புரிந்த தொழில்களையும் நற்றிணைப் பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. குறிஞ்சி நில மக்கள் வேட்டை நாய்களையும், முல்லை நில மக்கள் ஆநிரைகளையும், மருத நில மக்கள் எருமைகளையும் வளர்ந்துள்ளமை உறுதியாகின்றது. மருத நிலத்தில் விழா கொண்டாடும் பழக்கமும், பிள்ளை பெற்ற பெண்கள் வெண்கடுகுடன் எண்ணெய் கலந்து குளிக்கும் பழக்கமும் இருந்துள்ளதைக் காணமுடிகின்றது. மேலும், குறிஞ்சி நில மகளிர் நோயுற்றால் வேலனை அழைத்து வெறியாடு நிகழ்த்துதலையும், முல்லை நிலத்தில் சமைத்த உணவை முதலில் தெய்வத்திற்குப் படைப்பதையும் வழக்கமாகக் கொண்டிருந்தது தெளிவாகின்றது. மேலும், நெய்தல் நிலத்து மக்கள் இரவில் மீன் பிடிக்கச் சென்ற ஆண்கள் அதிகாலை திரும்பி வரும் பழக்கமும், பாலை நிலத்து மக்கள் திருடுவதற்கு முன்னர் தண்ணுமைக் கருவியை இசைக்கும் பழக்கமும் இருந்துள்ளதை நற்றிணைப் புலவர்களின் பாடல்களை ஆராய்கையில் காணக்கிடைக்கின்றது.

**துணைநின்ற நூல்கள்:**

[1] அண்ணாமலை.வே, சங்க இலக்கியத் தொன்மக் களஞ்சியம், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம், முதற்பதிப்பு: 2000.
[2] தங்கவேலு.கோ, தமி நில வரலாறு, தமிழ்நாடு பாடநூல் கழகம், சென்னை, முதற்பதிப்பு: 1976.
[3] தட்சிணாமூர்த்து.அ, சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள், மங்கயர்க்கரசி பதிப்பகம், தஞ்சாவூர், முதற்பதிப்பு: 2001.

[4] நாராயணசாமி ஐயர். பின்னத்தூர், நற்றிணை நானூறு, கழக வெளியீடு, சென்னை, நான்காம் பதிப்பு: 1967.

[5] பாலசுப்பிரமணியன்.கு.வெ, நற்றிணை மூலமும் உரையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, முதற்பதிப்பு: 2004.

[6] புலியூர்க் கேசிகன், தொல்காப்பியம், பாரி நிலையம், சென்னை, முதற்பதிப்பு: 1998.

[7] மாரியப்பன், தமிழக வரலாறு - ஒரு சமூகப் பொருளாதாரக் கண்ணோட்டம், தமிழ்நாடு பாடநூல் கழகம், சென்னை.